# கேழ்வரகின் விலை நிலையாக இருக்கும்

தென் இந்தியாவில் கேழ்வரகு முக்கிய உணவுப்பயிராகவும் குறிப்பாக வடக்கு பகுதி கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் வடமேற்கு தமிழகத்தில் மற்றும் இதன் பயன்பாடு பல கிராமங்களில் அதிக அளவு காணப்படுகிறது. கேழ்வரகு சிறுதானிய பயிர்களின் முக்கியமான உணவு பொருளாகவும், சேமித்து வைக்க ஏதுவானதாகவும், மிகுந்த ஊட்டசத்து வாய்ந்ததாகவும் கால்சியம் சத்து நிறைந்ததாகவும் மற்றும் நீரிழிவு நோய் தடுப்பு போன்ற சிறந்த பண்புகளை பெற்றுள்ளது.

இந்திய தேசிய வேளாண்மை அமைச்சகத்தின் கூற்றுப் படி 2014-15 ஆம் ஆண்டின் கேழ்வரகு 1.20 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 1.99 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மற்றும் 2015-16 ஆம் ஆண்டில் 1.86 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கபடுகின்றது. மிகுந்த வெப்பம் காரணமாக இதன் உற்பத்தி 0.13 மில்லியன் டன் அளவிற்கு 2015-16 ஆம் ஆண்டில் குறைந்து காணப்பட்டுள்ளது.

கேழ்வரகு உற்பத்தியில் கர்நாடகா, தமிழ்நாடு, ஒடிசா, ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா, உத்திர பிரதேசம் மற்றும் ஹிமாச்சல் பிரதேசத்தின் மலைப்பாங்கான பகுதிகள் பெரும் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு வேளாண் இயக்குனரகம் மற்றும் புள்ளியல் கூற்றுப்படி 2014-15 ஆம் ஆண்டின் கேழ்வரகு சாகுபடி 0.11 மில்லியன் ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.25 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொத்த தானிய சாகுபடி பரப்பளவில் கேழ்வரகு 4.67 சதவீதம் பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி வேலூர், சேலம் மாவட்டங்களில் அதிகமாக கேழ்வரகு உற்பத்தி செய்யும் மாவட்டங்களாகும்.

கேழ்வரகு பயிரிடப்படும் மாவட்டங்கள் பொதுவாக ஆடிப்பட்டத்தில் மானாவாரியாக பயிர் செய்யப்படுகிறது. டிசம்பர் மாத இறுதியில் இதன் வரத்து ஆரம்பமாகிறது. இதனை தொடர்ந்து வருடம் முழுவதும் சேமித்து பயன்படுத்தப்படுகிறது.

கேழ்வரகு உற்பத்தியில் தமிழ்நாட்டின் தன்னிறைவு அடையாமல் இதன் தேவை ஆதிகமாக இருந்தும் மற்றும் மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரா பிரதேசத்திலிருந்து கேழ்வரகு வரத்து சந்தைக்கு வர தொடங்கியுள்ளது.

இச்சூழலில், தமிழக விவசாயிகள் அறுவடை செய்த கேழ்வரகை விற்பனை செய்ய ஏதுவாக விலை நிலவரம் பற்றி அறிந்து கொள்ள, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 12 வருடங்களாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய கேழ்வரகு விலையை ஆய்வு செய்தது.

இதனடிப்படையில், கேழ்வரகின் பண்ணை விலையானது கிலோவிற்கு ரூ.19 முதல் ரூ.20 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைபடி நடவு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறுதானியங்கள் துறை
தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422 - 2450507